செ.வெ.எண்: 81 நாள்:28.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.11.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கூறியதாவது.

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாவட்டந்தோறும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, காவல்துறை நடவடிக்கை, வேலைவாய்ப்பு, பசுமை வீடு/சாலை வசதி/ குடிநீர்வசதி, கல்வி உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, ஆக்கிரமிப்பு அகற்றுதல், என மொத்தம் 380 மனுக்கள் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பில் 22 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், புதுக்கோட்டை நகர நிலவரித்திட்டம் சார்பில் 40 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனைப்பட்டாக்களும், புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரி விடுதியில் தங்கி கல்வி பயிலும் கல்லூரி மாணவிகளின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு விடுதியையொட்டி கம்பி வேலி அமைக்க மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியிலிருந்து ரூ.2 இலட்சம் மதிப்பிலான காசோலையும் என பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**